(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 25.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2025 பெப்ரவரி 22, சனிக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

423/2025

கௌரவ டி.கே. ஜயசுந்தர,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் தேயிலைக் கைத்தொழிற் துறை 2010ஆம் ஆண்டு தொடக்கம் வீழ்ச்சியடைந்து வருகின்றது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) தேயிலை மீள் செய்கைக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட ‘ஸ்டார்’ கருத்திட்டத்திற்கு நிதி வழங்கிய நிறுவனம் யாதென்பதையும்;

(iii) வழங்கப்பட்ட மொத்தப் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) அது கடனாகவா, இன்றேல், நன்கொடையாகவா வழங்கப்பட்டது என்பதையும்;

(v) கடனாக இருப்பின், வருடாந்த வட்டி வீதம் யாதென்பதையும்;

(vi) மேற்படி கடன் தொகையைச் செலுத்தி முடிக்கும் வருடம் யாதென்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தின் நிருவாகக் கட்டமைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆட்கள் யாவர் என்பதையும்;

(ii) அதனூடாக தேயிலை மீள் செய்கை மேற்கொண்டுள்ள காணியின் அளவு, ஒவ்வொரு தேயிலைப் பரிசோதகர் பிரிவுக்கமைவாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) கருத்திட்டத்தின் கீழ், தேயிலை மீள் செய்கை மேற்கொள்ளும் ஒரு ஏக்கர் காணிக்குச் செலுத்தப்பட்ட பணத்தொகை மற்றும் நிருவாகச் செலவு களுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) இன்றளவில் மேற்படி கருத்திட்டத்தை நிறைவு செய்திருப்பின், அதனை நிறைவு செய்த திகதி யாதென்பதையும்;

(ii) செய்கையாளர்களுக்கு நிலுவைப் பணம் செலுத்த வேண்டியிருப்பின், அது ஒவ்வொரு தேயிலைப் பரிசோதகர் பிரிவுக்கமைவாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

அவர் மேலும் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

431/2025

கௌரவ தனுஷ்க ரங்கநாத்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தில் 'ஐ-ரோட்' கருத்திட்டத்தின் கீழ் KL-2 கருத்திட்டம் (களுத்துறை பெகேஜ் 2) என்ற பெயரில் ஒரு கருத்திட்டம் இருந்ததென்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட ஒப்பந்த நிறுவனங்கள் சட்ட நடவடிக்கை மேற்கொண்டதன் விளைவாக மேற்படி கருத்திட்டமானது இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) இதன் காரணமாக அப்பிரதேச மக்கள் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் அகலவத்தை மற்றும் மத்துகம தேர்தல் தொகுதிகளில் அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த வீதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்துடன் தொடர்புடைய ஒப்பந்த நிறுவனம்/நிறுவனங்கள் யாதென்பதையும்;

(iii) அந்த நிறுவனத்தின்/நிறுவனங்களின் உரிமையாளர்கள் யாவரென்பதையும்;

(iv) மேற்படி சட்ட நடவடிக்கைகளின் தற்போதைய நிலை யாதென்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்தை பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

433/2025

கௌரவ தினிந்து சமன்,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை, மீகஹகிவுல புதிய நகர நிர்மாணத்திற்கு இணையாக மீகஹகிவுல பஸ்தரிப்பிடத்தை அமைப்பதற்காக செலவிடப்பட்ட தொகை யாது;

(ii) இதுவரை மேற்படி பஸ்தரிப்பிடம் பயன்பாட்டுக்கு உட்படுத்தப்படவில்லை என்பதை அறிவாரா;

(iii) அவ்வாறாயின் அதற்கான காரணங்கள் யாவை;

(iv) மேற்படி பஸ்தரிப்பிடத்தை மக்களின் பாவனைக்காக வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

(v) மேற்படி பஸ்தரிப்பிடத்திற்கான நுழைவுப் பாதையை நிர்மாணிக்க எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பஸ்தரிப்பிடம் பயனற்ற ஒரு நிர்மாணம் என்பதை ஏற்றுக்கொள்வாரா?

(ii) அவ்வாறாயின், அதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய நபர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

(iii) எதிர்காலத்தில் இத்தகைய நிலைமைகள் ஏற்படாமலிருக்க உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கும் வழிகாட்டல்கள் யாவை;

என்பதை அவர் மேலும் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

438/2025

கௌரவ நிசாந்த பெரேரா,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எல்பிடிய பிரதேச செயலகப் பிரிவிலுள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளின் அளவு ஏக்கர்களில் எவ்வளவென்பதையும்;

(ii) அவ் அளவு ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவு வாரியாக ஏக்கர்களில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) அக்காணிகளில் இரண்டாம் தரப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு ஏக்கர்களில் எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி காணிகள் வழங்கப்பட்டுள்ள இரண்டாம் தரப்பினரின் பெயர், அந்த ஒவ்வொரு தரப்புக்கும் காணிகள் வழங்கப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவு மற்றும் காணிகள் வழங்கப்பட்டதன் அடிப்படை வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

பாராளுமன்றச் சபை முதல்வர்,— சிறப்புரிமை,— தனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி அவர்களால் 2025 பெப்ரவரி 20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 118 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் கீழ் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — (ஒதுக்கப்பட்ட ஐந்தாம் நாள்) — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 பெப்ரவரி 17) [1].

*2.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2013 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 நவம்பர் 22 ஆம் திகதிய 2411/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.02.14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

**[1]** ''சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக'' எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---